V9T

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

-----

வகுப்பு 9

நேரம்: 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **8×1=8**

1) பாவேந்தர் பாரதிதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாடகநூல் .............

அ) பாண்டியன் பரிசு ஆ) அழகின் சிரிப்பு

இ) பிசிராந்தையார் ஈ) குடும்ப விளக்கு

2) பல்லவர் கால சிற்பக்கலைக்குச் சிறந்த ஒன்று .............

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி

இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

3) 'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?

அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்

ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

4) மணற்கேனி .............ப்போல் விளங்கும் நூல்கள் - இத்தொடருக்குப் பொருத்தமான இடைச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) உடன் ஆ) ஐ இ) ஆ ஈ) இன்

5) ஐந்து சால்புகளில் இரண்டு

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்

இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

6) மரவேர் என்பது ............. புணர்ச்சி

அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

அருவிய முருகியம் ஆர்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரங்கினம் மருண்டு நோக்குமால்

7) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் .............

அ) குடும்ப விளக்கு ஆ) இராவண காவியம்

இ) சிறுபஞ்சமூலம் ஈ) நாச்சியார் திருமொழி

8) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) புலவர் குழந்தை ஆ) பாரதிதாசன் இ) காரியாசான் ஈ) ஆண்டாள்

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **3×2=6**

**(குறிப்பு: 13 ஆம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

9) நடுகல் என்றால் என்ன?

10) மூவாது மூத்தவர், நூல் வல்லார் - இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.

11) செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.

12) தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?

13) 'அடுக்கிய' - எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **3×2=6**

14) காய்க்கும் - **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

15) **கலைச்சொல் தருக:**

அ) Saline soil

ஆ) Combination

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



16) **மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:**

அ) அணில் பழம் சாப்பிட்டது.

ஆ) நேற்று தென்றல் காற்று அடித்தது.

17) **இடைச்சொற்களை கொண்டு தொடர்களை இணைக்க:**

பழனிமலை பெரியது; இமயமலை மிகப் பெரியது.

18) **தமிழாக்கம் தருக:**

அ) Union is strength.

ஆ) Walk like a bull.

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **4×3=12**

**(குறிப்பு: 24ம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

19) ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

20) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

21) விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின்வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.

22) குறிஞ்சி நிலம் மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

23) முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது ?

24) பூவாது காய்க்கும் .......... எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**V. விடையளி:** **2×5=10**

25) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

26) அ) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



**(அல்லது)**

ஆ) "என்னை மகிழச்செய்த பணிகள்" - குறித்து ஐந்து வரிகளுக்கு குறையாமல் எழுதுக.

**VI. விடையளி:** **1×8=8**

27) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்து எழுதுக.

**(அல்லது)**

தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com